24.03.2026 O.S. 138/2022 .வா.சா 2 ராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி பிரகாஷ் அழைத்தன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். வாதியை எனக்கு8 வருடமாக தெரியும். பிரதிவாதி முருகையாவின் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் அவர் படித்த விபரம், தொழில் பற்றிய விபரம் தெரியாது என்றால் அவர் தொழில் விபரம் தெரியும். அவர் மாவுகட்டும் தொழில் செய்து வருகிறார். பிரதிவாதி மாவுகட்டு தொழில் செய்து வருவதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை தெரியும் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது தனிநபர் காசோலையா அல்லது நிறுவனத்தின் காசேலையா என்றால் அது பற்றி தெரியாது. காசோலையில் உள்ள விபரங்கள் ஆங்கிலத்தில் நிரப்பப்பட்டதா அல்லது தமிழில் நிரப்பப்பட்டதா என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். அது என்ன வண்ண பேனாவால்நிரப்பப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வைத்துள்ளதாக கூறும் கடை எண் மற்றும் அந்த கடை யார் பெயரில் உள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 22.1.2021 ம்தேதி ரூ.8 லட்சம் பிரதிவாதி வாதியிடம் கடனாக பெற்று கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ 1 காசோலை கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் பணபரிமாற்றமோ, காசோலை பரிமாற்றமோ நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழுபொ)
தென்காசி.